செ.வெ.எண். 28 நாள். 09.08.2017.

திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி பகுதியில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுத் தலைவர் திரு.பி.எம்.நரசிம்மன் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சந்தீப் நந்தூரி அவர்கள் முன்னிலையில் குழு உறுப்பினர்களுடன் வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆய்வு மேற்கொண்டார்.

---

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி பகுதியில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுத் தலைவர் திரு.பி.எம்.நரசிம்மன் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சந்தீப் நந்தூரி அவர்கள் முன்னிலையில் சட்டமன்ற உறுப்பினர் / குழு உறுப்பினர்கள் திரு எஸ் செல்வமோகன்தாஸ் பாண்டியன், திரு தங்கம் தென்னரசு, டாக்டர் நந்தகுமார், திருமதி மனோன்மணி, திருமதி ஜெயந்தி பத்மநாபன் ஆகியோருடன் சென்று வளர்ச்சித் திட்டப்பணிகளை இன்று (09.08.2017) ஆய்வு மேற்கொண்டார்.

இலஞ்சி பேரூராட்சி பொன்னகர் பகுதியில் ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குறு அங்கன்வாடி மையத்தினை திறந்து வைத்து குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கினர். தொடர்ந்து செங்கோட்டை நகராட்சி கே.சி.ரோடு பகுதியில் ரூ.66.00 இலட்சம் மதிப்பில் 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினையும், அச்சன்புதூர் பேரூராட்சி பகுதியில் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் ரூ.114.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் விடுதி ஆகியவைகளை பார்வையிட்டனர். மாணவர் விடுதி கட்டுமான பணிகளை விரைந்து முடிக்க உத்திரவிட்டனர்.

மேலும் ஆய்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.120.46 இலட்சம் மதிப்பில் நபார்டு திட்டத்தில் கட்டப்பட்டுள்ள பள்ளி கூடுதல் கட்டிடத்தினையும், தென்காசி பேருந்து நிலையம் அருகில் உள்ள அம்மா உணவகத்தினையும் ஆய்வு செய்தனர். மேலும், அம்மா உணவகத்தில் வழங்கப்படும் உணவு குறித்து ஆய்வு செய்தனர். தொடர்ந்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்று பெண்கள் மருத்துவ சிகிச்சை பகுதி, இதய தீவிர சிகிச்சை பகுதி, தீவிர சிகிச்சை பிரிவு, மருந்து கிடங்கு, அம்மா மருத்துவ காப்பீட்டு திட்ட வார்டு, சமையல்கூடம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆய்வு செய்தனர். தொடர்ந்து மேலகரம் அரசு பொது நூலகத்தில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.10.00 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடம் ஆகியவைகளை ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின்போது ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு இளம் பகவத், இ.ஆ.ப., தலைமைச் செயலக செயலர் (பொ) திரு க.பூபதி, துணைச்செயலாளர்கள் திரு க.லோ. சிவகுமரன், திரு பாலகிருஷ்ணன், திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. மாஹின் அபுபக்கர், மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் திருமதி நிர்மலா, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு பாஸ்கரன், குழந்தைகள் வளர்ச்சித் திட்ட திட்டஅலுவலர் திருமதி உமாதேவி, தென்காசி நகராட்சி ஆணையர் திரு ஏகராஜ் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

<u>வெளியீடு</u>

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி